\\ மின்னஞ்சலில் \\

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்
சென்னை - 600 006

ந.க. எண். 26952/ அ4 / இ3 / 2021, நாள். 11.03.2022

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி - இளநிலை உதவியாளர் /தட்டச்சர்கள்/ சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-3 ஆகியோர்களுக்கு உதவியாளராகப் பதவி உயர்வு/மாறுதல் வழங்குதல் - 2021-2022ஆம் ஆண்டிற்கான உதவியாளர் காலிப்ப பணியிடங்களுக்கு ஏற்ப 15.03.2021 நிலவரப்படி உதவியாளர் பதவி உயர்வு / பணி மாறுதலுக்குத் தகுதி பெற்றவர்களின் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிடுதல் -சார்ந்து.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண். 368, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, நாள். 18.10.1993.
2. அரசாணை எண். 97, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள். 14.02.1996.
3. அரசுக் கடிதம் எண்.24362/S1/20-1, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள்.10.11.2020.
4. அரசாணை (நிலை) எண். 34, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத் (பி) துறை, நாள். 21.02.2001.
5. அரசாணை எண். 16, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள். 21.02.2002.
6. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர்தொகுதி) செயல்முறைகள் ந.க.எண். 26952/அ4/இ3/2021, நாள். 07.07.2021, 12.07.2021, 03.11.2021 மற்றும் 28.12.2021.
7. சார்நிலை அலுவலர்களிடமிருந்து வரப்பெற்ற கருத்துருக்கள் மற்றும் மேல்முறையீடுகள் சார்ந்த கருத்துருக்கள்.

---------

தமிழ்நாடு அமைச்சுப் பணியில் 2021-2022ஆம் ஆண்டிற்கான உதவியாளர் காலிப்பணியிட மதிப்பீட்டிற்கு ஏற்ப 15.03.2021 நிலவரப்படி உதவியாளர் பதவி உயர்வு (சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III பணிமாறுதல் பெற தகுதியான பணியாளர்கள் எவரும் இல்லை) பெறுவதற்குத் தகுதிவாய்ந்த இளநிலை உதவியாளர்கள் / தட்டச்சர்கள் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மேலும், தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் இடம் பெற்றுள்ள பணியாளர் எவர் மீதும் தமிழ்நாடு குடிமுறைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17 (b)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை, குற்றவியல் வழக்கு ஏதும் நிலுவையிலிருந்தாலோ அல்லது

ஒழுங்கு நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்கப்பட்டிருந்தாலோ அதன் விவரத்தினையும், சம்பந்தப்பட்ட அலுவலர் உடனடியாக இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) பெயரிட்ட முகவரிக்கு கடிதம் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

இப்பட்டியலினை உடனடியாக அனைத்துப் பணியாளர்களும் பார்வையிடும் வகையில் (அந்தந்த அலுவலகம்/பள்ளியில் தகவல் பலகையில் ஒட்டும் வகையில்) அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் உடன் அனுப்பி ஒப்புதல் பெறப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு:** 15.03.2021 நிலவரப்படி
உதவியாளர் பதவி உயர்வுக்குத்
தகுதி பெற்றவர்களின் தேர்ந்தோர்
பெயர்ப் பட்டியல் (1 முதல்140 வரை)

**இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி).**

11.3.22

**பெறுநர் :** அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

**நகல் :**தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
**நகல் :**மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6 .
**நகல் :**இயக்குநர், மாநிலக்கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,சென்னை–6.
**நகல் :**இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம், சென்னை –6.
**நகல் :**மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்ககம், சென்னை - 6.
**நகல் :** இயக்குநர், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்ட இயக்ககம், சென்னை –6.
**நகல் :** உறுப்பினர் செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை –6.

} தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.

**நகல் :** இவ்வலுவலக 'அ2' பிரிவு.